[24th April 1959

SRI T. S. RAMASWAMY PILLAI : When was action taken against the office-bearers of the society and when against Government officials who were in charge? What type of action was taken?

THE HON. SRI R. VENKATARAMAN : Action was taken on 1st February 1957 and proceedings are pending against the officers.

SRI K. VINAYAKAM : Was not the fraud spread over a range of period and officers belonging to the department abetting this kind of crime?

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under enquiry and we cannot given any opinion before it is finished.

SRI R. KRISHNASAMI NAIDU : சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு ஸ்தாபனத்தில் இத்தகைய கோளாறுகள் அடிக்கடி நடந்து கொண்டிருப்ப தால் இதைபபற்றி விசாரணை செய்கின்ற அதிகாரிகள் தொடர்ந்து இருப் பதற்குப் பதிலாக அடிக்கடி அவர்களுக்கு இடமாற்றம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே இதைப்பற்றியுள்ள விசாரணை முடிவதற்கு வருஷக் கணக்காக ஆகிவிடுகிறது. ஆகவே இம்மாதிரி ஸ்தாபனங்களில் நடைபெறும் கோளாறுகளைப்பற்றி விசாரணை செய்வதற்காக கூட்டுறவு ஸ்தாபனத்தின் கீழ் தனயாக ஏதாவது ஒரு டிபார்ட்மெண்டோ அல்லது தனி செக்ஷனே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு இலாகாவில் நடை பெறும் குற்றங்களை எல்லாம் விசாரணை செய்வதற்காக அந்தந்த இலாகாவின் கீழ் தனித்தனி யூனிட்டோ அல்லது டிபார்ட்மெண்டோ ஏற்படுத்துவது என்றால் அது வீணகத்தான் இருக்கும், அதோடு பணமும் விரயமாகும். மேலும் இதைப்பற்றி விசாரணை செய்கின்ற அதிகாரிகளை அடிக்கடி மாற்று வது கிடையாது. மூன்று வருடத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டும் என்கின்ற முறையில்தான மாற்றப்பட்டு வருகிறது. அதல்லாமல் வேறு எந்த காரணத்திற்காகவும் மாற்றப்படுவதில்லை.

Hill tribes

*136 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்ஜியத்தில் எவ்வளவு பேர்கள் நரிக்குறவர்கள், குரு விக்காரர்கள் மற்றும் மலை ஜாதியினர் (ஜில்லாவாரியாக) ?

(ஆ) இவர்களில் எவ்வளவு பேர்கள் படிக்கக்கூடியவர்கள் ?

(இ) இவர்களில் யாராவது படித்து உத்தியோகத்தில் இருக்கிறார் களா ? அப்படியானால் ஜில்லாவாரியாக விவரங்களைத் தெரிவிக்கவும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) Particulars are being collected from the Collectors and they will be placed on the table of the House after they are obtained.

Reclamation of saline and alkaline lands

*137 *Q*.—SRI G. G. GURUMURTHI (on behalf of SRI K. R. NALLASIVAM) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் நஞ்சைப் பகுதிகளில் உள்ள களர் நிலங் களைச் சீர்திருத்த பொதுவான திட்டம் போடப்பட்டுள்ளதா ?

24th April 1959]

(ஆ) இந்த வேலைக்காகத் தனிப்பட்ட விவசாயிகளுக்கு மான்யம் கொடுக்கும் உத்தேசம் சர்க்காருக்குண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) There is at present no proposal for granting subsidy to individual cultivators for the reclamation of alkaline lands.

SRI G. G. GURUMURTHI : ஸார், இவ்விதம் ஸப்ஸிடி ஒன்றும் கொடுக்கப்படவில்லையாயினும் அங்குள்ள விவசாயிகளுக்கு போதுமான உரங்கள், நல்ல விதைகள் இவைகளை கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு பொதுவாக ஜிப்ஸம் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்த முறையில் மேட்டூர், திருநெல்வேலி ஜில்லாவில் சில பகுதிகள், மதுரை ஜில்லாவில் சில பகுதிகள் இங்கு எல்லாம் இம்மாதிரியான நிலங்கள் இருக்கின்றன. இந்த நிலங்களில் ஜிப்ஸத்தை உபயோகப்படுத்தி அபி விருத்திசெய்கின்ற முறைகளைப்பற்றி "மேழிச் செல்வத்"தில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. இம்மாதிரிப்பட்ட நிலங்களுக்கு எல்லாம் ஜிப்ஸம் கன்ஸெஷன் முறையில் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

Basic B.T. College, Orathanad

* 138 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா ஒரத்த நாட்டிலுள்ள பேஸிக் பி.டி. (Basic B. T. College) காலேஜுக்கு புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(ஆ) அப்படியானால் எப்போது ? எவ்வளவு செலவில் ?

(இ) இக்கல்லூரிக்கு விவசாய பயிற்சிக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) A provision of Rs. 1·5 lakhs has been included in the Second Five-Year Plan for this purpose. The buildings are likely to be constructed in 1960–61.

(c) The college has no farm land exclusively for itself. Out of the 4·97 acres of agricultural land belonging to the Government Basic Training School (in the building of which the college is temporarily situated) the college has brought under cultivation one acre.

SRI A. VEDARATHNAM : இந்தக் கல்லூரிக்கு விவசாயத்திற்காக எவ்வளவு நிலம் வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது ? அந்த நிலம் அவர்களுக்கு எப்பொழுது வழங்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் 31 ஏக்கர் நிலம் விவசாயத்திற்காகவும் கட்டிடத்திற்காகவும் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். முப்பத்தொரு ஏக்கர் நிலம் வரும்போது குறைந்தது 25 ஏக்கராவது விவசாயத்திற்கு உபயோகப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.